22nd September 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காருடைய கொள்கையில் வித்யாசமும் எந்த விதமான முரண்பாடும் இல்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்தாலும் சேர்க்காவிட்டாலும் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்க முடியாது. அவ்வாறு சொல்லவும் இல்லை. இதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகிறோம். அரசாங்கத்தின் பங்கைக் கொண்டும் ப்ரைவேட் செக்டாருடைய பங்கைக் கொண்டும், இந்த இரண்டையும் சேர்த்து ஒரு கார்போரேஷன் வைத்து அதை நடத்துவது சுலபம் என்ற யோசனை இந்த அரசாங்கத்தினிடம் இருக்கிறது. அதைத்தான் இந்த அரசாங்கத்தின் சார்பாக சொல்லப்பட்டது.

SRI M. P. SUBRAMANYAM : ஸார், மத்திய அரசாங்கத்திற்கு ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் சிபாரிசு செய்திருப்பதாகக் கூறினார்கள். இதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அந்தக் கமிட்டிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகவும் அதைப்பற்றி பரிசீலனை இந்த கமிட்டி செய்யும் எனவும் கூறப்பட்டது. இந்த கமிட்டி என்ன முடிவு எடுக்கும் என உறுதியாக சொல்ல முடியாது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இண்டஸ்ட்ரிசுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவரும் இந்த அரசாங்கம் இதுவரையில் இதை பற்றி பரிசீலனை செய்து ஆரம்பிப்பதற்கு என் முடிவு செய்ய வில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அலுமினியம் தொழிற்சாலை அமைப்பது பற்றி அரசாங்கம் எற்கெனவேயே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டும் இதில் கவனம் செலுத்தி அந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்து அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

SRI S. RAMALINGAM : குறிப்பிட்ட இரண்டு மலைகளிலிருந்தும் அலுமினியம் பாக்ஸைட் கனி இருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்று கனம் மந்திரி சொன்னார். ஜியலாஜிகல் சர்வே நடந்து ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜியலாஜிகல் சர்வே செய்துவிட்டுதான் அங்கு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது சேலம் மலையில்தான் இருக்கிறது.

SRI M. P. SUBRAMANYAM : இந்த அரசாங்கம் இது வரையில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். நடவடிக்கை எடுத்துக் கொண்ட பிறகு இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியுமா, முடியாதா என்பதையும் அதை எடுக்க முடியுமா என்பதைப்பற்றியும் சொல்வதற்கு ஏதாவது புள்ளி விவரங்கள் அரசாங்கத்தினரிடம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முடியுமா முடியாதா என்று சொல்வதற்கு இப்பொழுது முடியாது. மேற்கொண்டு என்ன செய்வது, இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு என்ன செய்வது என்பதில் இந்த அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினருக்கு எடுத்துச் சொல்லுகிறேன்.

Colonies for Harijans in rural areas

* 2388 *Q.*—SRI O. A. NANJAPPA : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether loans are given to Harijans to build houses on the sites assigned to them;

(*b*) whether the Government have prepared any scheme to form colonies for Harijans in rural areas, and if so, whether any funds have been allotted for the same; and

(*c*) if not, whether the Government contemplate starting model colonies in various districts, particularly in Salem district?

THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) to (*c*) No, Sir.

SRI O. A. NANJAPPA : இதுவரையில் சேலம் ஜில்லாவில் அல்லது இந்த மாகாணத்தில் மற்ற இடங்களில் ஏழை ஹரிஜனங்களுக்கு எவ்வளவு மனேகட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன, அப்படி நிலம் வழங்கப்பட்டிருக்கும் ஹரிஜனங்களுடைய எண்ணிக்கை என்ன என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் மற்றும் பல சௌகர்யங்கள் செய்து கொடுப்பதற்கும் அரசாங்கம் எவ்வளவோ திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறது. எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிய வேண்டுமானல் தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI A. RATNAM : ஹரிஜனங்கள் வீடுகள் கட்டிக் கொள்ள வேண்டுமென்று கடன் கேட்டால் அவர்கள் ஜாமீன் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. பில்டிங் சொசைடி மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல் ஒவ்வொரு சொசைடியும் பத்து சத விகிதம் ஹரிஜனங்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு என்று கடன் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்பதில் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஹரிஜனங்கள் வீடுகள் கட்ட வேண்டும் என்று கடன் கேட்டால் அவர்கள் கட்டும் வீடுகளையே ஜாமீனுக வைத்துக் கொண்டு அவர்களுக்குக் கடன் கொடுக்க முன் வருவார்களா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : வீடுகள் கட்டுவதற்கும் மற்றவைகளுக்கும் எவ்வளவு சலுகைகள் காட்ட முடியுமோ அவ்வளவையும் அரசாங்கம் காட்டிக்கொண்டு வருகிறது. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனேயும் செய்து கொண்டு வருகிறது. அதைப்பற்றி கூடிய சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வருவார்கள். இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் அரசாங்கம் திட்டம் போட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் பண உதவியையும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது போடப்பட்டிருக்கும் திட்டம் பெரிய அளவில் இருப்பதால் அதற்கு பதில் சொல்வதற்கு அதிக நேரம் ஆகும் என்பதால் அதைப் பற்றி இப்பொழுது சொல்வதற்கு சந்தர்ப்பம் இல்லை.

SRI R. KRISHNASWAMI NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேசீய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழும் சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழும் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு ஜாமீன் இல்லாமல் கடன் கொடுக்கிறுர்கள் அல்லவா ?

THE HON. SRI B. PARAMESWARAN : உண்மை.

SRI A. RATNAM : ஸார், ஹரிஜனங்களுக்கு இதுவரையிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லியும் இன்னும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆனல் அவைகள் பிராஜெக்ட் ஏரியாவில்தான் கட்டிக் கொடுக்கப்போவதாக இருக்கிறது. அங்குள்ளவர்களுக்குத்தான் சலுகைகள் காட்டப் போவதாக இருக்கிறது. அப்படி இல்லாமல் ஹரிஜனங்கள் ராஜ்யத்திலுள்ள எல்லா இடங்களிலும் பரவலாக யார் யாருக்கு சொந்தமாக நிலங்கள் இருக்கின்றனவோ அவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு

22nd September 1955]

அரசாங்கம் முன் வருமா ? ப்ராஜெக்ட் ஏரியாவில் அவர்களுக்குக் கட்டிக் கொடுத்தால் அங்கு அவர்கள் பல வருஷங்கள் குடியிருந்து வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். அப்படி வேலை செய்து அடிமையாக ஆக்கக் கூடிய நிலைமை ஏற்படும். மற்றும் அங்கு சேரிகளையும் உண்டாக்கும் நிலைமையும் ஏற்படும். அதனால் ஹரிஜனங்கள் இருக்கும் எல்லா இடங்களிலும் வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை ஆட்சியாளர்களைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி கிடைத்த பிறகு கம்யூனிடி டெவலப்மெண்ட் ஏரியாவில் எங்கெல்லாம் கட்ட முடியும் என்று பரிசீலனை செய்யப் போகிறார்கள். அது மாத்திரம் அல்ல. மற்ற பிராந்தியங்களிலும் அவர்களுக்கு எவ்வளவு சௌகர்யங்கள் செய்ய முடியுமோ அதைச் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். இலவசமாகக் கட்டிக் கொடுப்பதற்கும் திட்டம் போட்டிருக்கிறார்கள். அது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது. பதிலை சீக்கிரத்தில் எதிர்பார்க்கிறோம்.

SRI A. IYANAR : மதுரை ஜில்லாவில் கம்யூனிடி ப்ராஜெக்ட் ஏரியாவில் வீடுகள் கட்டுவதற்கு கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் தனிப்பட்ட ஏழைகள் கேட்டால் கொடுப்பது இல்லை. சேர்ந்தார்போல் லைனாக பத்து அல்லது எட்டு வீடுகள் என்று இருந்தால் அங்குதான் வீடுகள் கட்டுவதற்கு கடன் கொடுக்கிறார்கள். அதனால் தனிப்பட்ட ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு கடன் கொடுக்க வசதி செய்வார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அதையும் பரிசீலனை செய்து பார்க்கிறோம்.

SRI O. KORAN : Sir, Sri Swami Sundara Das, a gentleman from Kozhikode, has donated about 100 acres of land Nadiyirippa in Ernad taluk. May I know whether the Government will come forward to give financial help to Harijans to build houses and settle down there?

THE HON. SRI B. PARAMESWARAN : That proposal is under the examination of the Government.

SRI R. S. ARUMUGAM : ஹரிஜனங்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிறபடியால், அவர்களுக்கு பல இடங்களில் மனைக்கட்டுகள் வழங்கப்பட்டும் அவர்களால் வீடுகள் கட்டிக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத்தெரியுமா ? சில இடங்களில் அநியாய வட்டிக்கு கடன் வாங்கி வீடுகள் கட்டிய பிறகு அந்த வீடுகளையே அந்த வட்டிக்காக கொடுத்து விடுகிறார்கள் என்பதும் சர்க்காருக்குத் தெரியுமா ? ஆகவே அவர்களுக்கு சொற்ப வட்டியில் நீண்டகால கடனாக கொடுக்க திட்டமான ஏற்பாடு செய்வார்களா ? ஷை விஷயத்தை துரிதப்படுத்துவார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : ஹரிஜனங்கள் வீடுகள் கட்டிக் கொள்ளும் வகையில் எப்படி கஷ்டப்படுகிறார்கள் என்ற தகவல் சர்க்காரிடம் இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு அங்கத்தினர் சொன்ன யோசனையையும் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்வதற்கு தயாராக இருக்கிறோம். அதன்படி அவர்களுக்குக் கூடிய சீக்கிரம் வசதி செய்து கொடுக்க முடியும் என்று நம்புகிறேன். மத்திய அரசாங்கம் கொடுக்கும் பணத்தையும் வைத்துக்கொண்டு அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதோடு வீடுகள் கட்டிக் கொடுப்பதை எவ்வளவு துரிதப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் துரிதப்படுத்த முடியும்.

[22nd September 1955

SRI V. S. SIVAPRAKASAM : May I know, Sir, whether any special housing schemes for Harijans during the Second Five-year Plan are under the examination of the Government?

THE HON. SRI B. PARAMESWARAN : Yes, Sir. A scheme for construction of 1,500 houses in rural areas and 50 houses in urban areas for Harijans on the lines chalked out by the Government of Madras has been included in the Grant-in-aid Scheme for the removal of untouchability during 1955–56. Provision has also been made for construction of 5,000 houses each year in the Second Five-year Plan period under the Grant-in-aid Scheme. Both the schemes have been forwarded by the Government in July 1955 to the Government of India and their approval is awaited.

9-30 a.m. SRI A. RATNAM : "ஹரிஜன் காலனீஸ்", திட்டத்தின்கீழ் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க முடியாதென்பது என்னுடைய எண்ணம். அது உண்மையும் கூட. ஆனால் சேரிகளை அகற்றவேண்டுமென்ற திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் 600 லட்சம் ரூபாயையும் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டித்தருவதற்கே செலவிட அரசாங்கம் முன் வருமா ? அன்றியும் காலனி டெவலப்மெண்டு ஸ்கீம் விதிகள் சில, சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழேயே ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு இடைஞ்சலாக இருந்திருக்கின்றன. எனவே இனி யாவது அந்த விதிகளைத் திருத்தி ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ? இந்தப் பிரச்னையைப் பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்தக் கேள்வியின் மீது சபை விவாதிக்க ஒரு மணி நேரம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : It will be considered.

THE HON. SRI B. PARAMESWARAN : May I submit for your consideration that I have already answered this question exhaustively and that, if the hon. Member Sri Ratnam still insists on an one-hour debate, the Hon. Deputy Speaker might consider it.

DEPUTY SPEAKER : Yes, it will be considered. Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS *RE*

(1) DELAY IN GETTING THE ASSENT OF THE PRESIDENT TO THE MADRAS CULTIVATING TENANTS' PROTECTION BILL, 1955.

DEPUTY SPEAKER : I have received an adjournment motion from Sri M. Kalyanasundaram which reads as follows :—

" I beg to move that the business of the House be adjourned for the purpose of discussing the following definite matter of urgent public importance, viz. :

' the failure of the Government to obtain the assent of the President to the Cultivating Tenants Protection Bill, 1955 passed by this House on 24th August 1955 resulting in large-scale eviction and consequent unrest among the peasants.' "